# முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

## O.S.No. 93/2018

2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 27 ம் தேதியன்று DW.2 ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திருமதி.S.எழில்,M.L.**, முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சந்திரன்** | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாவேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**என்னிடம் காண்பிக்கப்படும் பிவாசாஆ 13 9.6.2006 ல் என் தந்தை ஆர்.சி.பழனியப்பன் 1 ம் பிரதிவாதி சுந்தரமூர்த்திக்கு எழுதி வைத்த உயிலில் நான் 2 வதாக சாட்சி கையெழுத்திட்டுள்ளேன். அதில் உள்ள முகவரி என்னுடையது தான். 1 வது சாட்சி என்னுடைய அண்ணன் குணசேகர் கையெழுத்திட்டுள்ளார். ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கைரேகை என் அப்பாவுடையது. சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்த கைரேகை என் அப்பாவுடையது. இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் 2 வதாக சாட்சி கையெழுத்திட்டுள்ளேன். முதலாவதாக என் அண்ணன் குணசேகர் கையெழுத்திட்டுள்ளார்.**